RBI / 2005-06 / 89
DBOD.No.AML.BC.23/14.01.064/2005-06 ஆகஸ்ட் 2, 2005

பிராந்தியக் கிராம வங்கிகள் உட்பட
அட்டவணையிலுள்ள அனைத்து
வணிக வங்கிகளின் தலைமை அதிகாரிகளுக்கு

அன்புடையீர்,

<u>வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு</u>
<u>வங்கிக் கண்ககு துவக்க வசதி</u>

கறுப்பு பணத்தை வெள்ளையாக்கும் முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றிய விளக்கம் கொண்ட 2004 நவம்பர் 29 தேதியிட்ட எங்கள் சுற்றறிக்கை DBOD.No.AML.BC.58/14.01.001/2004-05 (உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்) ஐப் பார்க்கவும். இதன் படி, வாடிக்கையாளர் ஒருவர் கணக்குத் துவக்க வரும் போது, வாடிக்கையாளர் ஏற்பு கொள்கையும், வாடிக்கையாளரை அறிந்து கொள்ளும் வழி முறைகளும் பின்பற்றப்பட வேண்டும்.

2. மஹாராஷ்டிரா மாநிலத்தில் நிறையப் பேர் சமீபத்திய வரலாறு காணாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பது நீங்கள் அறிந்ததே. மாநில அரசு பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூ. 50,000/- த்திலிருந்து ரூ.2 லட்சம் வரை காசோலையாக வழங்க முடிவு செய்துள்ளது. வங்கிக் கணக்கு இதுவரை இல்லாதவர்கள் உடனடி ஓர் வங்கிக் கணக்கு துவக்குவதற்கான தேவையான உடனடி நிவாரணத்தை கருத்தில் கொண்டு, வங்கிகள் குறைந்த அளவு பழக்கங்களைக் கடைப் பிடித்து உடனடிக் கணக்கு துவங்க ஆவன செய்ய வேண்டும். கீழ் கண்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை அடிப்படியாக வைத்து, கணக்குகள் துவக்கப்படலாம்.

அ) ஏற்கனவே கணக்கு வைத்திருக்கும் ஒருவரிடமிருந்து அறிமுகக்கடிதம்.

ஆ) ஓட்டுரிமை வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், பள்ளி, கல்லூரி, நிறுவனம், அலுவலகம் அளிக்கும் அடையாள அட்டை, மின்சார உபயோக அட்டை, ரேஷன் அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று

இ) மேலே சொல்லப்பட்ட ஆவணங்கள் வைத்திருக்கும் அருகிலுள்ள இருவர் கொடுக்கும் அறிமுகக் கடிதம் அல்லது

ஈ) இவை எதுவே இல்லையெனில் வங்கிக்கு திருப்தி தருகின்ற எந்த ஆவணமும்.

நம்பிக்கையுள்ள,

பிரசாந் சரண்
மேலாளர